DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS, PADMANABHAPURAM.**

**O.S. No.177/2020**

DEPOSITION OF WITNESS D.W.1

Name : செல்வராஜ் Father's Name : வைகுண்டம் நாடார்
Village Taluk
Religion : Age

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the day of 04.02.2026.

**முதல் விசாரணை -**

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, மகிபாலன்பட்டி அஞ்சல், நெல்மணிப்பட்டி என்ற முகவரியில் வசிக்கும் வைகுண்டம் நாடார் அவர்களின் மகன் 76 வயதான செல்வராஜ் ஆகிய நான் குறிப்பிடும் சங்கதிகள் அனைத்தும் உண்மை என்று உறுதி கூறுகிறேன். நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். நான் தாக்கல் செய்யும் சத்திய பிரமாண வாக்குமூலம் ஆகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை -

1. இந்த வழக்கிடை சொத்து என்னுடைய தந்தை வைகுண்ட நாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி.

2. எனது தந்தைக்கு வழக்கிடைய சொத்து அவரும், அவருடைய சகோதரர்களும் ஏற்படுத்திக் கொண்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் மூலமாக கிடைக்கப் பெற்றது என்றால் சரி.

3. இந்த வழக்கிடை சொத்து சம்மந்தமாக எனது தந்தை வைகுண்ட நாடார் எனது மகன் எட்வின் பிரிஸ்லிக்கு ஆதரவாக ஒரு உயில் ஆவணமாக எழுதி வைத்தார் என்றால் சரி.

4. உயில் சாசனத்தை அடிப்படையாக கொண்டு எனது மகன் இரணியல், உரிமையியல் நீதிமன்றத்தில் இவ்வழக்கின் 1வது வாதியான செல்லத்தங்கத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரி.

5. உயில் சாசனம் எழுதுவதற்கான அதிகாரம் எனது தந்தைக்கு அந்த சொத்தில் முழு உரிமையிருந்ததால் தான் அதை ஏற்படுத்த முடிந்தது என்றால் சரி.

6. எனது தந்தை நோயுற்று, வயோதிக காரணத்தை பயன்படுத்தி கொண்டும், அவருக்கு சுயநினைவுகள் இல்லாததை பயன்படுத்திக் கொண்டும், என் நிர்பந்தத்தின் பேரில் என் தந்தை அந்த பதிவு செய்யப்படாத உயில் சாசனத்தை என் மகனுக்கு ஆதரவாக குளச்சல் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணத்தை நிர்பந்தத்தின் பேரில் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல.

7. எனது மகன் தாக்கல் செய்த வழக்கு உயில் சாசனம் நிரூபிக்கப்படாத காரணத்தினால் இரணியல் நீதிமன்றத்தால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

8. எனது மகன் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்புரையை எதிர்த்து மேல்முறையீடு மனுவை பத்மனாபபுரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தாரா என்றால் தாக்கல் செய்துள்ளார்.

9. அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி.

10. மேல்முறையீட்டு ஆணையை எதிர்த்து இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி.

11. அதனை எதிர்த்து வேறு எதுவும் மேல்முறையீட்டை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

12. என்னுடைய மகனின் உரிமைகளை வழக்கிடை சொத்தில் நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்த காரணத்தினால், அவர் இந்த வழக்கில் அவசியமற்ற நபர் என்றால் சரி.

13. வழக்கிடைய சொத்தில் யாதொரு உரிமையும் என் மகனுக்கு இல்லை என்றால் சரியல்ல.

14. இந்த வழக்கின் வாதிகள் அனைவரும் என்னுடைய உடன்பிறந்த சகோதர, சகோதிரிகள் என்றால் சரி.

15. என் உடன்பிறந்த சகோதர, சகோதிரிகளான இந்த வழக்கின் வாதிகளுக்கும், எனக்கும் சம அளவில் வைகுண்ட நாடாரின் வாரிசு என்ற முறையில் அவரால் விட்டு செல்லப்பட்ட வழக்கிடை சொத்துக்களில் இந்து வாரிசு உரிமை சட்டத்தின் கீழ் உரிமையுள்ளது என்றால் அவர்களுக்கு உரிமையில்லை.

16. வழக்கின் வாதிகளான எனது சகோதர, சகோதிரிகளுக்கும், எனக்கும் வழக்கிடை சொத்தில் தலா 7 ல் 1 பாகம் மட்டுமே உண்டு என்றால் சரியல்ல.

17, நான் என்னுடைய பதிலுரையில் சொல்லியுள்ளது போல எனக்கு தாவா சொத்தில் 28 ல்8 என்ற விகிதத்தில் பங்கு உண்டு என்றால் சரியல்ல.

18. நான் என் மகனோடு வாழ்ந்து வருகிறேன் என்றால் சரி.

19. நடந்து பாகப்பிரிவினை வழக்கு பற்றி என்னுடைய மகனுக்கு தெரியும் என்றால் சரி.

20. வழக்கிடை சொத்தில் வாதிகள் கோரியுள்ள படி 7 ல் 1 பங்கு மட்டுமே வைகுண்ட நாடாரின் வாரிசுகளான எங்களுக்கு தலா பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

21. வழக்கிடை சொத்து சம்மந்தமாக இந்நீதிமன்றம் செலவுத் தொகையோடு ஆணையிட வேண்டும் என்றால் சரியல்ல.

22. மறுவிசாரணை ஏதுவும் இல்லை.

பிரதிவாதி தரப்பில் இதர வாய்மொழி சாட்சிகள் விசாரணைக்காக 16.02.2026 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது.